முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1127

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. சதாசிவ சற்குருவே அரங்கா வாழ்க
சகலருக்கும் ஞானம் அருளவந்த
பூதளத்தின் அவதார ஞான குருவே
புண்ணிய வழிகாட்டும் ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13 ம் நாள் 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை)
ஆசிதந்து ஆறுமுகன் உன்னுள்ளே
ஆக்கமுடன் அற்புதங்கள் நடத்திவர
3. வருகின்ற காலங்கள் உந்தன் வழி
வையகமே ஞான லோகமாகும்
சிந்தை வைத்து உன்னை சரணடைவோர்க்கு
சித்திகளும் தானாக கைகூடும்
4. கூடுகின்ற காலங்கள் கனிந்து வர
குரு அரங்கன் திருவடி பற்றியவர்க்கு
ஈடேற்றம் பிறவாத பெரும் பேறாய்
யுகபரத்தில் இனிதே நடந்தேறும்
5. நடந்தேற ஆறுமுகன் சூட்சமமாய்
ஞான சித்திகளோடு பல்வேறு சக்திகளை
சக்திகளை அரங்கன் கரம்பட உலகோர்க்கு
சாதகமாய் அருளி அற்புதம் நடத்தி வர
6. வருகவே வருகின்ற காலமெல்லாம்
வணங்கி அரங்கன் குடில் நாடி
தருகின்ற மக்கள் தர்ம உதவி வழி
தானவர்கள் வினை வெல்வதோடு
7. வெல்வதுடன் அழியாமை என்கின்ற
வேலவன் என் சக்தி பரிபூரணமாய்
பரிபூரணமாய் உலகோர் கண்டடைந்து பரமானந்த ஞான பெரும்பேற்றை
துரிதகதி அடைந்து உலகோர் தேசமெல்லாம் மாற்றும் ஞானவான்களாக
8. ஆகவே அற்புதங்கள் நடத்தி
அரங்கன் வழி ஞான ஆட்சிக்காலம்
ஏற்புடைய காலமாக உலகோர்க்கு
இனிதே வழங்கி உலகோர் சிறக்க நேரும்

9. நேர்மைகொண்டு அரங்கனை தொடர்ந்தால் போதும்
நிலவுலகம் இந்தவித அற்புதத்தை
பெருமைபட கண்டு மாற்றம்பெறும்
பிரணவப்பிரியன் யான் அருளிய
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–